மலர் : 12 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 3

TVGM தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रड विलज मिनस्ट्री

ഹണ്ട്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**ஜனவரி 2012**

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ. 250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2012 ஜனவரி**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்.

ஏசாயா 54 : 17.



சாலியமங்கலம் – தஞ்சாவூர்



துவாக்குடி – திருச்சி

நன்றி : பாஸ்டர் விக்கி – ஏலீம் தமிழ் சபை

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## *We wish you a Happy Newyear 2012*



**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
TASOL ஸ்தாபகர்
**Cell : 94449 80445**



P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்
**Cell : 94435 44628**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் **புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

கடந்த வருடம் முழுவதும் ஜீவன் , சுகபெலன் தந்து கர்த்தருக்காக வாழவும் , அவரை மகிமைப்படுத்தவும் கிருபை செய்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்.

TVGM தலைமை அலுவலகத்திற்கு நேரடியாக வந்து பார்வையிட்டு, சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு உணவளித்து தேவ நாமத்தை மகிமைப்படுத்திய ஒவ்வொருவருக்கும் நன்றி.

2012ம் ஆண்டில் ஒருமுறையாவது நேரடியாக எங்களிடம் வந்து தங்கி, சிறுபிள்ளைகள் மத்தியில் கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்படியாகவும், மற்றும் கிராம ஊழியங்களை பார்வையிடும்படியாகவும் அன்புடன் அழைக்கிறோம்.

ஜெபவீடு கட்டுமானப் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. உங்கள் வசதிக்கேற்ப ஒரு தொகையை கொடுத்து கிராம ஊழியர்களை ஊக்குவிக்க அன்புடன் அழைக்கிறேன்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக !

**Date : 02.12.11**

கிறிஸ்துவின் பணியில்,
ஸ்டீபன் கிறிஸ்டோபர்

**புத்தாண்டு வாக்குத்தத்த செய்தி :**

**சகோ.P.T. கிறிஸ்டோபர் – TVGM ஸ்தாபகர்.**

# உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்.

ஏசாயா 54 : 17

2012 ஆம் ஆண்டுக்குள் அடியெடுத்து வைத்திருக்கும் என் அன்பு சகோதரனே,சகோதரியே,தேவ ஊழியரே! இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே

**“உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்”**

என வாழ்த்துகிறேன்.

கடந்த ஆண்டில் எத்தனையோ சோதனைகளையும், வேதனைகளையும் நீங்கள் கடந்து வந்தீர்கள். ஆனாலும் கர்த்தருடைய கரம் உங்களோடிருந்தது. சத்துருவானவன் மீண்டும் மீண்டும் உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், குடும்பத்திற்கும், சபைக்கும் விரோதமாக எத்தனையோ சூழ்ச்சிகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறான்.

**சங்.41:9** நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.

என்ற இயேசுவின் வார்த்தையின்படி உங்களோடுகூட இருக்கிறவர்களே உங்களுக்கு விரோதமாக, ஆயுதங்களை உருவாக்கிக் கொண்டிருக்கலாம்.

**மத். 10 : 36** “ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே”என்ற வசனத்தின்படி உங்கள் குடும்பத்தாரே உங்களுக்கு விரோதமாக ஆயுதங்களை உருவாக்கிக் கொண்டிருக்கலாம்.

பொறாமையின் ஆயுதமா? எரிச்சலின் ஆயுதமா? பொருள் நஷ்டமாகிய ஆயுதமா? கடன்பிரச்சனையாகிய ஆயுதமா? குடும்ப பிரிவினையாகிய ஆயுதமா? குழந்தை பிறப்பை தடை செய்யும் ஆயுதமா? திருமணத் தடையை கொண்டு வரும் ஆயுதமா? வெளிநாட்டில் குடியிருக்க விடாதபடி சத்துரு கொண்டு வரும் ஆயுதமா? அல்லது சம்பள உயர்வை மட்டுப்படுத்தும் ஆயுதமா?

எந்தவிதமான ஆயுதமாகவும் இருக்கட்டுமே !

**“உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்”** ஆமென் !

பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**“எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்”**

மீண்டும் மீண்டும் அறிக்கை செய்யுங்கள்.

**உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்!**

இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயல்லாமல், உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?

**பக்தன் பாடுகிறார் :**

***உனக்கெதிராய் எழும்பும் ஆயுதம்***
***வாய்த்திடாதே என்றதாலே ஸ்தோத்திரம்***
***பறந்திடுமே உம் நாமத்திலே***
***பரனே எனக்காய் ஜெயக்கொடியே***
***என்னை மறவா இயேசுநாதா***
***உந்தன் தயவால் என்னை நடத்தும்***

இந்த ஆண்டிலே, இந்தப்பாடலை அடிக்கடி பாடுங்கள். பாடிக்கொண்டேயிருங்கள். அப்பொழுது "**உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்**". ஆமென்.

ரோமர் 8 : 31

**தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார் ?**

நமக்கு விரோதமாய் உருவாக்கப்படும் ஆயுதம் வாய்க்காமல் போக "ஒரே வழி" தேவன் நம் பட்சத்திலிருக்க வேண்டும்.

**தேவன் நமது பட்சத்திலிருக்க நாம் என்ன செய்ய வேண்டும் ?**

***முதலாவதாக : இயேசுவையே பின்பற்ற வேண்டும்.***

இயேசு சொன்னார் : **யோவான் 14 : 6**

நானே வழியும் சத்தியமும்
ஜீவனுமாயிருக்கிறேன்.
என்னாலேயல்லாமல் ஒருவனும்
பிதாவினிடத்தில் வரான்.

**இயேசுவே வழி. ஒரே வழி இயேசு.**

இயேசு சொன்னார் : **என்னைப் பின்பற்றுங்கள்.** தேவனைப் பின்பற்றிய காலேப்பின் ஆசீர்வாதத்தைப் பாருங்கள். **எண். 14 : 24** என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும், உத்தமமாய் **என்னைப் பின்பற்றி** வந்தபடியினாலும், அவன் போய் வந்த தேசத்திலே அவனைச் சேரப் பண்ணுவேன்.

இயேசு சொன்னார் : **யோவான் 14:2,3** ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன். ஆமென்.

பவுல் கூறுகிறார் : **எபிரெயர் 13 : 14**

நிலையான நகரம் நமக்கு இங்கே
இல்லை, வரப்போகிறதை
நாடித் தேடுகிறோம்.

அப்.14:22 நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே, தேவஊழியரே !

சத்துருவினுடைய பெருமுயற்சி, நீங்களும், நானும் அந்த பரம கானானுக்குள் பிரவேசியாதபடி, அநேக உலக கவலைகளினாலும், பாரங்களினாலும் நிரப்பி தேவனுக்கடுத்த காரியங்களை சிந்திக்க விடாதபடி, உலக காரியங்களிலேயே போராட வைத்து விடுகிறான். இதிலிருந்து விடுபட ஒரே வழி **இயேசு. இயேசுவையே பின்பற்றுவோம்.**

யோவான் 21: 21,22 யோவானை கண்டு பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே இவன் காரியம் என்ன என்றான். அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, **நீ என்னைப் பின்பற்றிவா** என்றார்.

அடுத்தவர் காரியத்தில் தலையிட்டு, குறை சொல்லி,தூற்றிக் கொண்டு அலைகிற சகோதரனே, சகோதரியே 2012ம் ஆண்டில் தேவன் உன்னைப் பார்த்து சொல்கிறார் :

"**நீ என்னைப் பின்பற்றி வா.**"

பின்பற்றுவாயா ?

**வெளி. 3 : 11** ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள் ளதைப் பற்றிக் கொண்டிரு.

**பக்தன் பாடுகிறார் :**

*இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்*
*பின் நோக்கேன் நான், பின்நோக்கேன் நான்*
*உலகம் என் பின்னே சிலுவை என் முன்னே*
*பின்நோக்கேன் நான், பின்நோக்கேன் நான்*

பாடுங்கள் பாடுக்கொண்டேயிருங்கள்.

மத்தேயு 28: 20 "இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும், உங்களுடனே கூட இருக்கிறேன்" என்ற **இயேசுவையே பின்பற்றுங்கள்.**

அப்பொழுது **உங்களுக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்.**

## இரண்டாவதாக : இயேசுவுக்கு பிரியமானதையே செய்ய வேண்டும்

நீதி. 16 : 7 **ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால்,** அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்..

எபி. 13 : 16 அன்றியும் **நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும்** மறவாதிருங்கள். இப்படிப்பட்ட **பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.**

2கொரி. 9 : 7 உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் **தேவன் பிரியமாயிருக்கிறார்.**

சங். 147 :11 தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் **கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.**

சங்.19 :14 அவர் நீதியிலும் நியாயத்திலும் **பிரியப்படுகிறார்.**

நீதி. 12 :22 உண்மையாய் நடக்கிறவர்களோ **அவருக்குப் பிரியம்.**

நீதி. 15 :8 செம்மையானவர்களின் ஜெபமோ **அவருக்குப் பிரியம்.**

எபேசியர் 5: 10 **கர்த்தருக்குப் பிரியமானது** இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்.

சங்.40 :8 என் தேவனே, உமக்குப் **பிரியமானதைச் செய்ய எனக்கு போதித்தருளும்.**

எபிரெயர் 11 :6 விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்.

சங். 1: 2 கர்த்தருடைய வேதத்தில் **பிரியமாயிருந்து** இரவும் பகலும் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

ரோமர் 12 :1 நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் **தேவனுக்குப் பிரியமுமான** ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்

**எபேசியர் 6 : 6** மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்.

**ரோமர் 8 :33, 34** தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ் சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தார்;அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.

எனவே வேதவசனங்களின்படி நடக்க ஒப்புக் கொடுங்கள். **தேவனுக்கு பிரியமானதையே செய்யுங்கள்.**

**ஏசாயா 54 : 15** இதோ, உனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடினால் அது என்னாலே கூடுகிற கூட்டமல்ல; எவர்கள் உனக்கு விரோதமாய் கூடுகிறார்களோ, அவர்கள் உன் பட்சத்தில் வருவார்கள்.

**உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்.**

**தேவனுக்கே மகிமை !**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## விருதுநகர் மாவட்டம் - சிவகாசி யூனியன்

# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** **2012 ஜனவரி 16** திங்கள் காலை 9 மணி முதல் **ஜனவரி 20** வெள்ளி இரவு 10 மணி முடிய **சிவகாசி யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம்** : **2012 ஜனவரி 16** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம்** : **2012 ஜனவரி 20** வெள்ளி இரவு **7 - 10** மணி

**ஜனவரி 16 முதல் ஜனவரி 20 வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

### உபவாச ஜெபம் நடைபெறும் இடம்

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,** TVGM
C/o. **கர்மேல் பெந்தெகொஸ்தே சபை**
26-D**, காந்தி நகர் (பஸ் ஸ்டாண்டு மேல்புரம்)**
**சிவகாசி - 626 123. விருதுநகர் மாவட்டம்.**
**போன் :** 04562 - 277209 **செல்:** 94422 30491

உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர்** M. **ஜான்ராஜ்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,
**100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 , 94449 80445**

# திருச்சி மாவட்டம் - மணச்சநல்லூர் யூனியன்
# 100 - கிராம ஊழிய அறிக்கை

**தேதி : 31.10.2011 முதல் 04.11.2011 முடிய**

Thanks:The Light House Ministries.NECK - ELC



கர்த்தருடைய கிருபையினால் திருச்சி மாவட்டம் – **மணச்சநல்லூர்** யூனியனில் 31.10.2011 முதல் 04.10.2011 வரை **100–கிராம ஊழியம்** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல் நாள், கடைசிநாள், கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை **மணச்சநல்லூர் C.S.I. சபையின் போதகர் Rev. அருள்சிங்** தலைமையில் **சகோ. கிறிஸ்துதாஸ்** (Repco Bank - Asst.General Manager ) அவர்களும், **C.S.I.** கமிட்டி மற்றும் சபை உறுப்பினர்களும் பொறுப்பெடுத்து உதவி செய்தார்கள்.




தமிழ்நாட்டின் 11 மாவட்டங்களைச் சேர்ந்த 44 பேர் வந்து ஊழியம் செய்தார்கள். முதல் நாள் ஜெபத்தில் மணச்சநல்லூர் யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் நியூசிலாந்து தேசத்திலிருந்து **பாஸ்டர் விக்கி** அவர்கள் தலைமையில் 4 பேர் கொண்ட ஊழியக் குழுவினரும், இலங்கை தேசத்திலிருந்து **திரு. தியாகராஜன் தம்பதியினரும்** கலந்து கொண்டு ஜெபித்து சிறப்பித்தார்கள். **சகோ. P.T. கிறிஸ்டோபர்** அவர்கள் ஜெபத்தில் நடத்தினார்கள்.

பின்பு ஊழியர்களை 11 குழுக்களாக பிரித்து, தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காகஜெபித்தார்கள். **C.S.I.** சபையின் சார்பாக ஊழியர்களுக்கு மதிய விருந்து வழங்கப்பட்டது. உணவிற்கு பிறகு ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்குள் ஜெபத்துடன் கடந்து சென்று வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து **"இயேசுகிறிஸ்துவே கர்த்தர்"** என்று அறிவித்து ஊழியம் செய்தார்கள். மொத்தம் 10,900 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 10,000 இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள், 5000 மற்ற கைப்பிரதிகள், 10,000 சிலுவைக்கொடிகள், 400 **'நம் மத்தியில் வாழ்ந்த அவர்'** புத்தகமும் இலவசமாக வழங்கப்பட்டது.

கடைசிநாளில் மீண்டும் **C.S.I** ஆலயத்தில் கூடி கிராம ஊழியர்கள் சாட்சி சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்த ஜெபத்தில் மணச்சநல்லூர் **C.S.I** கமிட்டி உறுப்பினர்கள், சபையார் கலந்து கொண்டு ஜெபித்தார்கள். **C.S.I** சபை போதகர் தேவசெய்தி கொடுத்ததார்கள். சகோ. கிறிஸ்துதாஸ் ஊழியர்களுக்கு நன்றி கூறினார்கள். இந்த ஊழியத்தின் மூலம் **139** புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து தபால் மூலம் வேதபாடம் அனுப்ப கேட்டுக் கொண்டார்கள்.

# கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 : சகோதரர்கள் : பால்ராஜ், சூசை மாணிக்கம், ஆபிரகாம், செல்வராஜ்.**

**மாதவபெருமாள் கோவில்** ஊராட்சியிலுள்ள குக்கிராமங்களில் வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, இயேசு தான் மெய்யான தெய்வம் என்று சொல்லி ஊழியம் செய்தோம். அநேகர் விருப்பத்துடன் கேட்டார்கள். வியாதியுள்ளவர்கள், பிரச்சனையுள்ளவர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1300 சுவிசேஷப் புத்தகங்கள், 910 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2 : சகோதரர்கள் : ஜோசுவா , பீட்டர் ராமலிங்கம், ஜெபமலைநாதன், செல்வராஜ்.**

**கோவத்தக்குடி** கிராமத்தில் தங்கியிருந்து அதைச் சுற்றியுள்ள **ஈச்சம்பட்டி, பாண்டியபுரம், தொடையூர்** கிராமங்களில் ஊழியம் செய்தோம். இக்கிராமங்களிலுள்ள மக்கள் அதிகமாக இயேசுவை நேசிப்பதை பார்த்தோம். ஜெபித்தபோது பலர் சுகமடைந்தார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3 : சகோதரிகள் : எஸ்தர் எபிநேசர், பிச்சையம்மாள், செல்லக்கனி, லூர்துமேரி.**

**அழகிய மணவாளம்** கிராமத் தலைவர் சரோஜா அவர்கள் வீட்டில் தங்கியிருந்து சுற்றியுள்ள **6** கிராமங்களில் ஊழியம் செய்தோம். ஒரு பெண் தன் மகளுடைய வியாதிக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். நாங்கள் ஜெபிப்பதைப் பார்த்து மிகவும் அழுதார்கள். சுவிசேஷத்தை வாஞ்சையுடன் கேட்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 910 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4 : சகோதரிகள் : எஸ்தர் கனகாம்புஜம், கஸ்தூரி சுப்பையா, கிருபா பழனியம்மாள், மரியாள் தாவீது.**

**திருப்பஞ்சீலி** ஊராட்சியிலுள்ள கிராமங்களில் வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். கிறிஸ்தவர் யாருமே இல்லை. விக்கிரக கோயில்கள் உள்ள கிராமங்களாக இருந்தது. ஆனாலும் மக்கள் எந்த எதிர்ப்புகளும் சொல்லாமல் யோவான் சுவிசேஷப் புத்தகங்களை அன்பாக வாங்கிக் கொண்டு, சுவிசேஷத்தைக் கேட்டார்கள். மொத்தம் 700 சுவிசேஷப் புத்தகங்கள், 910 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 : சகோதரிகள் : வீதியாள், மணியம்மாள், மேரி செல்லாபாய், தேவகிருபை.**

எங்களுக்கு கொடுக்கப்பட்ட **8** கிராமங்களில் ஊழியம் செய்தோம். இந்த ஊர்களில் எங்கும் கிறிஸ்தவர்களே இல்லை. ஒரு சிலர் மட்டும் புத்தகம் வேண்டாம் என்றார்கள். அநேகர் வாஞ்சையுடன் வாங்கினார்கள். பலருக்காக ஜெபித்தோம். மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 : சகோதரிகள் : அந்தோணிமேரி, சீலா, ரோணிக்கம், சாரதா.**

**சாலைப்பட்டி, திருவெள்ளரை, சிறுபத்தூர்** கிராமங்களில் யோவான் சுவிசேஷம் கொடுத்தோம். ஒரு சிலர் வேண்டாம் என்றார்கள். திருவெள்ளரை கிராமத்தில் புத்தகம் கொடுக்கக்கூடாது என தடை செய்தார்கள். மற்ற கிராமங்களில் மக்கள் ஆர்வமுடன் வாங்கிக் கொண்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 920 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 : சகோதரர்கள் : பிரேம் ஆனந்த், குமார், ஆசீர்பாண்டி, மைக்கேல்.**

**பூனாம்பாளையம்** பகுதியில் ஜனங்கள் ஆர்வமுடன் சுவிசேஷப் புத்தகங்களை வாங்கிக் கொண்டார்கள். ஒரு பெண்ணுக்கு அசுத்தஆவி பிடித்து அவர்களை அலைக்கழித்து வேதனைப் படுத்தியது. இவர்களுக்காக ஜெபித்த போது அவர்களுக்குள் இருந்த அசுத்த ஆவி பாம்பு போல ஊர்ந்து கொண்டு வெளியேறியது. அந்தப் பெண் சுகம் பெற்று சாட்சி சொன்னார்கள். மொத்தம் 950 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8:சகோதரர்கள்: மாற்கு மாரியப்பன், மகாராஜன், நோவா, ஜெயக்குமார்.**

**உளுந்தங்குடி, சீதேவிமங்கலம், மேலக்கல்பாளையம்** கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். நாங்கள் இயேசுவைப் பற்றி அறிவித்து கொண்டு வரும்போது 7 வாலிபர்கள் முழுமையாக ஆர்வமுடன் சுவிசேஷத்தை கேட்டார்கள். வியாதியுள்ள மக்கள் பலர் எங்களிடம் ஜெபிக்கக் கேட்டார்கள். நாங்கள் ஜெபித்தோம். மொத்தம் 1300 சுவிசேஷப் புத்தகங்கள், 920 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 : சகோதரிகள் : வசந்தா ஸ்டீபன், அபியேல் அந்தோணியம்மா, கிளமெண்ட்ஸ்மேரி.**

**எதுமலை, ரெகம்பி** கிராமங்களில் வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தபோது எல்லோரும் வாங்கிக் கொண்டார்கள். சிலர் உங்க சாமிக்கும் எங்க சாமிக்கும் ஆகாது என்று வாங்க மறுத்தார்கள். ஒரு பள்ளிக்கூடத்தில் அங்குள்ள பிள்ளைகளுக்கு பாட்டு, கதை களோடு இயேசுவை சொன்னோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 910 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10 : சகோதரிகள் : லூாயிஸ், ஜோதிமணி, தெபோராள், ரெபேக்கா.**

நாங்கள் சென்ற கிராமங்களில் ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து சுவிசேஷப் புத்தகம் கொடுக்கக் கூடாது என தடை செய்தார்கள். வேறு கிராமத்தில் சென்று ஊழியம் செய்தபோது, அங்குள்ள வர்கள் ஆர்வமுடன் கேட்டார்கள். குழந்தையில்லாத பெண்ணுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபித்தோம். மொத்தம் 750 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11 : சகோதரிகள் : மரியம்மாள், மேரிமீனா, சலோமி சம்மனசு, அன்னாள் சண்முகத்தாய்.**

**வலையூர்** என்ற கிராமத்தில் தங்கி சுற்றியுள்ள கிராமங்களில் ஊழியம் செய்தோம். ஒரு வீட்டில் அவர்களுடைய மகன் காணாமல் போய் இரண்டு வருடம் ஆகிறது, அவன் கிடைக்க ஜெபியுங்கள் என்றார்கள். இதற்காக ஜெபித்தோம். அந்த பையன் போன் மூலம் பேசி 10ம் தேதி வீட்டுக்கு வருகிறேன் என்று சொல்லி யதாக அந்த வீட்டார் எங்களிடம் கூறி சந்தோஷப்பட்டார்கள். ஒரு பூசாரி தன் மனைவிக்கு கண் தெரியவில்லை என ஜெபிக்கச் சொன்னார். ஜெபித்தோம். இயேசுவை இனி நான் வழிபடுவேன் என்று சொன்னார். மொத்தம் 1100 சுவிசேஷப் புத்தகங்கள், 920 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை !**

**100 – கிராம ஊழியத்திற்காக ஜெபித்த , உழைத்த , உதவி செய்த யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் நன்றி கூறுகிறோம்.**

## காணிக்கை அனுப்புபவர்களின் கவனத்திற்கு !

**உங்கள் ஈமெயில் , தொலைபேசி எண் , முகவரி ஆகியவற்றை தெரியப்படுத்தி உதவுங்கள்.**

நீங்கள் TVGM & TASOL ஊழியங்களுக்கு காணிக்கைகளை பேங்க் மூலமாகவோ , மற்றவர்கள் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பும்போது அதற்குரிய ரசீதும், நன்றிக் கடிதமும் எங்கள் அலுவலகத்திலிருந்து உங்களுக்கு 15 நாட்களுக்குள் வராவிட்டால் தயவுகூர்ந்து பணம் அனுப்பிய அத்தாட்சி விபரத்துடன் எங்களோடு தொலைபேசி , ஈமெயில் அல்லது தபால் மூலம் தெரியப்படுத்தி உறுதி செய்து கொள்ளுங்கள்.

காணிக்கை அனுப்பும்போது மணியார்டர் கூப்பனில் உங்கள் முழு விலாசத்தையும், தொகையையும், நோக்கத்தையும் எழுத மறவாதீர்கள்.

மணியார்டர் கூப்பனில் எழுத வசதியில்லாவிட்டால் தயவுசெய்து டி.வி.ஜி.எம். தலைமை அலுவலக முகவரிக்கு தெரியப்படுத்தி உதவுங்கள்.

மேலும் உங்கள் தொலைபேசி எண் மற்றும் உங்களிடமோ அல்லது உங்கள் பிள்ளைகளிடமோ ஈமெயில் I.D இருக்குமானாலும் தயவுகூர்ந்து எங்களுக்கு அனுப்பி வையுங்கள். உடனுக்குடன் உங்களுக்கு பதில் அனுப்ப ஏதுவாக இருக்கும்.

## பத்திரிகை வாசகர்கள் கவனத்திற்கு !

2012 ஆம் ஆண்டிற்கான பத்திரிகை சந்தாவை அனுப்பி புதுப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் முகவரி மாறும்போது பழைய, புதிய முகவரிகளை தயவுசெய்து தெளிவாக எழுதி தெரியப்படுத்துங்கள்.

மேலும் கடந்த 3 வருடங்களாக TVGM உடன் எந்தவித தொடர்பும் இல்லாதவர்களுக்கு வருகிற 2012 பிப்ரவரி மாதம் முதல் பத்திரிகை அனுப்புவதை நிறுத்துகிறோம் என்பதையும், மீண்டும் எங்களோடு தொடர்பு கொள்ளும்போது தொடர்ந்து பத்திரிகை அனுப்புவோம் என்பதையும் அன்புடன் தெரிவிக்கிறோம்.

100– கிராம ஊழியம் மாதாந்திரப் பத்திரிகை மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட நன்மைகளை ஒரு போஸ்ட் கார்டு அல்லது **100village@tvgm.org** என்ற ஈமெயில் மூலம் எங்களுக்கு தெரியப்படுத்தி உதவுங்கள்.

## 2012 ஜனவரி - இயேசுவை விரும்புவோர் முகாம்

கூடும் இடம் →

மாவட்டம் : தூத்துக்குடி யூனியன் : உடன்குடி
தேதி : 21.01.2012. நேரம் : காலை 9.00 மணி

**பாஸ்டர்** K. **ரவி ,** இயேலின் கோட்டை ஏ.ஜி. சர்ச்
457, குழந்தை இயேசு நகர், மணப்பாடு வழி,
குலசேகரப்பட்டிணம் - 626 206. தூத்துக்குடி மாவட்டம்.
செல் : 98657 49723 ( பாஸ்டர் ரவி ) 99432 81640 ( பன்னீர் )

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்
## துதி,கனம், மகிமை – இயேசுகிறிஸ்துவுக்கே!

பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.

## புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோ. ராகவன், காஞ்சிபுரம்**

2011 அக்டோபர் மாதம் "தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்" பத்திரிகையில் வெளிவந்த **"நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன்"** என்ற வாக்குத்தத்தம் மிகவும் மனதுக்கு ஆறுதலாக இருந்தது. எங்கள் வியாதிக்காக ஜெபிக்கும்படி கடிதம் எழுதினேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் சுகம் தந்தார்.

**சகோதரி சுலோச்சனா, தி.மலை.**

என் மகள் 2011ல் நடந்த தேர்தலில் வெற்றி பெற வேண்டுமென ஜெபிக்க கடிதம் எழுதினேன். கர்த்தருடைய கிருபையால் ஜெயித்து விட்டாள். தேவனுக்கே மகிமை.

**சகோதரி மெர்ஸி, வேலூர்.**

என் திருமண காரியத்திற்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். என்னை எல்லோரும் வெறுத்தார்கள். மரித்து போய் விடலாம் என்று கூட நினைத்தேன். ஆனால் தேவன் எனக்கு ஒரு அற்புதம் செய்தார். என் திருமணகாரியம் ஒழுங்காகி விட்டது.

**சகோ. சேகர், தி. மலை.**

என்னுடைய M.Phil Project நன்றாக முடிக்க ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் நன்றாக முடிக்க கிருபை செய்தார்.

## விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோதரி அமலா, கன்னியாகுமரி**

என் மகனுடைய திருமண காரியம் தடையாகி கொண்டே இருந்தது. தங்களுக்கும் ஜெபிக்கும் படி கடிதம் எழுதினேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு தடைகளை நீக்கி கர்த்தருக்கு பயந்த ஒரு மகளை தந்து, திருமணத்தை சிறப்பாக நடத்தி தந்தார். தேவனுக்கே மகிமை.

**சகோதரி ஆலிஸ், தேனி.**

என் மூத்த மகன் அவனது விரோதிகளால் பலவித இழப்புகளை சந்தித்து, மனகஷ்டத்திற்குள் காணப் பட்டான். ஜெபிக்கும்படி கடிதம் எழுதினோம். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் விடுதலையைக் கொடுத்தார்.

**சகோதரி கண்ணம்மாள், கோவை.**

என் இளையமகளுக்காக ஜெபிக்க கடிதம் எழுதினேன். கர்த்தர் மகளுக்கு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்தி கொடுத்து, குழந்தை பாக்கியத்தையும் தந்து ஆசீர்வதித்தார். மேலும் என் மூத்த மகள் குடும்பத்தின் சமாதானத்திற்காக ஜெபிக்கும்படி கடிதம் எழுதினேன். அவர்கள் இப்பொழுது சந்தோஷமாக இருக்கிறார்கள். தேவனுக்கே மகிமை.

**சகோதரி ஜோதிமணி, திண்டுக்கல்.**

கடந்த 6 மாதங்களாக உடல் உபாதை களால் கஷ்டப்பட்டேன். வெள்ளிக் கிழமை உபவாச ஜெபத்தில் எழுதி வைத்து ஜெபித்தேன். கர்த்தர் சுகம் கொடுத்தார். மேலும் என் தங்கைக்கு பீஸ் கட்டுவதற் கான தேவைகளையும் கர்த்தரே அற்புதமாக சந்தித்தார்.

# TVGM சிறுவர் இல்லம் - சோமரசம் பேட்டை





TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளை நேரடியாக பார்வையிட்டு,
சாட்சியளித்து, விருந்தளித்தவர்களுக்கு மிக்க நன்றி !




2011 நவம்பர் மாதத்தில் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு விசேஷ விருந்தளித்த பாஸ்டர் விக்கி குழுவினர், சகோதரி பெல்லா ராபர்ட், சகோ.ஞானபிரகாசம், சகோ. சாமியப்பன், சகோ. ஆல்பர்ட், சகோதரி மீனா, சகோதரி வசந்தா சோமன், சகோதரி பார்வதி அம்மாள் மற்றும் கேக் வழங்கிய சகோ. சேகர் ஆகியோருக்கு சிறுவர் இல்லப் பிள்ளைகள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**அன்புடன் அழைக்கிறோம்.**

2012 ஆம் ஆண்டில் உங்கள் பிறந்த நாள் மற்றும் திருமணநாளை
TVGM சிறுவர் இல்லப்பிள்ளைகளோடு விசேஷித்த முறையில்
மகிழ்ச்சியோடு கொண்டாட அன்புடன் அழைக்கிறோம்.

**31.10.20011 அன்று TVGM நடுஇரவு ஜெபத்தில் பாஸ்டர் விக்கி அவர்கள் தேவசெய்தியளித்து, கர்த்தருடைய பந்தியை நடத்தினார்கள்.**




*தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக*
*அவருக்கு ஸ்தோத்திரம்.* 2கொரி. 9 : 15

## 2011 ம் ஆண்டில் TVGM ஊழியங்கள் மூலம் மகிமையின் தேவன் செய்த மகத்துவமான செயல்கள் !

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!**

கர்த்தருடைய கிருபையினால் 2011ம் ஆண்டில் TVGM மூலம் நிறைவேற்றப்பட்ட ஊழிய அறிக்கையை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். நீங்கள் இந்த ஊழியங்களுக்காக ஜெபித்தீர்கள். கொடுத்தீர்கள். இந்த ஊழியத்தின் ஆசீர்வாதத்தில் உங்களுக்கும் சிறப்பான பங்கு உண்டு. பரலோகத்திலும் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். ஊழிய அறிக்கையை வாசித்து **என்னோடேகூட கர்த்தரை மகிமைப்படுத்துங்கள் ; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக!**

### 1. 100–கிராம ஊழியம்:–

தமிழ்நாட்டிலுள்ள 11+1 யூனியன்களில் வெவ்வேறு கிறிஸ்தவ சபைகளை மையமாக வைத்து **100–கிராம ஊழியம்** தடையில்லாமல் நடைபெற்றது. இந்த ஊழியத்தின் போது 1,22,301 யோவான் சுவிசேஷப் புத்தகங்களும், 1,35,000 **'இயேசுவே இரட்சகர்'** கைபிரதிகளும், 55, 000 மற்ற கைப்பிரதிகளும், 3600 **'நம்மில் வாழ்ந்த அவர்'** புத்தகங்களும், 1,10,000 சிலுவைக் கொடிகளும் கிராமங்களில் இலவசமாக வழங்கப்பட்டன.

### 2. பின்தொடர்பணி ஊழியம் / இயேசுவை விரும்புவோர் முகாம்:

**100 கிராம ஊழியத்தின்போது** சந்தித்த 1810 புறமத நண்பர்களுக்கு தபால் மூலம் வேதபாடங்கள் அனுப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட இயேசுவை விரும்புவோர் முகாமில் 22 புறமத நண்பர்கள் கலந்து கொண்டு இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். இயேசுவின் நாமம் புறமதநண்பர்கள் மூலம் மகிமைப்பட்டது.

### 3. ஆலயமில்லாத கிராமங்களில் ஜெபவீடு கட்டுதல்:–

2011ம் ஆண்டில் தேவனுடைய மகிமைக்கென்று மொன்னவேடு, வல்லம், சோமரசம்பேட்டை, உப்புலாபுரம், ஜேடார்பாளையம், பள்ளிப்பட்டு, கோபாலபுரம், குளவாய்பட்டி, கலவை மோட்டூர், வடகால் , துவாக்குடி, சாலிய மங்கலம், குப்பம்மாசத்திரம், மத்துார், கோட்டூர், தோட்டநாவல் ஆகிய ஆலயமில்லாத 16 கிராமங்களில் ஜெபவீடுகள் கட்டி முடிப்பதற்கு பொருளாதார உதவி செய்து, பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

### 4. சிறுவர் இல்லம்:–

திருச்சி மற்றும் குண்டல் சிறுவர் இல்லத்திலுள்ள 70 பிள்ளைகளுடைய தேவைகளையும் கர்த்தர் அற்புதமாக சந்தித்தார். அநேக கர்த்தருடைய பிள்ளைகள் தங்கள் பிறந்தநாள் , திருமணநாள் மற்றும் முக்கிய தினங்களில் பிள்ளைகளை நேரடியாக வந்து பார்வையிட்டும், காணிக்கைகளை அனுப்பியும் சிறப்பு விருந்தளித்தார்கள்.

**5. தரிசன முகாம் :-** 2011 ஏப்ரல் 14 ம் தேதி கன்னியாகுமரி மாவட்டம் – விவேகானந்தபுரத்திலும், ஜுன் 11 ம் தேதி தூத்துக்குடி மாவட்டம் – நெய்விளை பகுதியிலும் TVGM **தரிசனமுகாம்** நடத்த கர்த்தர் கிருபை செய்தார்.

**6. கலிலேயா முகாம் :-**அக்டோபர் 7,8, 9 ஆகிய தினங்களில் கோடாவிளையில் **கலிலேயா முகாம்** நடைபெற்றது. இதன் மூலம் அந்த சுற்றுவட்டாரப் பகுதியிலுள்ள அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

**7. பத்திரிக்கை ஊழியம்:-** 2011ம் ஆண்டில் 12 மாதங்களும் தடையில்லாமல் **"100–கிராம ஊழியம், தமிழ் கிராமங்களுக்கு சுவிசேஷம்"** ஆகிய இரண்டு பத்திரிக்கைகளும் வெளிவர கர்த்தர் கிருபை செய்தார்.

**8. அறிமுகப்பணி ஊழியங்கள்:-**நாகர்கோவில் அறிமுகப்பணி அலுவலக சகோதரிகளுக்கு அநேக புதிய சபைகளில் அறிமுகப்பணி செய்யும் வாய்ப்புகளை கர்த்தரே ஏற்படுத்திக் கொடுத்தார். தேரூர், சுபாஷ்நகர் பகுதிகளில் சுவிசேஷ ஊழியமும், பேச்சிப்பாறை, சங்கரன்புதூர், கண்ணன்பதி, தேவகுளம் கிராமங்களில் பின்தொடர்பணியும் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். ஊழியங்களை துரிதமாக செய்வதற்காக ஒரு மாருதி ஆம்னி வேன் வாங்கவும் கர்த்தர் உதவி செய்தார்.

**9. The Ambassador School of Learning ( TASOL ):**

TASOL க்கு 12A, 80G ஆர்டர் கிடைக்கவும், ஒரு சில நிலங்களை பட்டா செய்யவும் கர்த்தரே கிருபை செய்தார்.

**10. வடஇந்திய ஊழியங்கள்:-** அக்டோபர் மாதத்தில் ஒரிஸாவிலுள்ள 50 சந்தைகளில் 15 குடையின் கீழ் "கிறிஸ்தவ புத்தக கடை " அமைத்து 1 லட்சம் ஒரியா கைபிரதிகள் விநியோகிக்கும் திட்டத்தை துவங்கவும், டிசம்பர் மாதத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தில் நாக்பூரை மையமாக வைத்து 1 லட்சம் ( மராட்டி,ஹிந்தி ) கைபிரதிகள் விநியோகிக்கும் திட்டத்தை துவங்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

**11. தொழுநோயாளர்கள் ஊழியம் :**திருச்சி – **பஞ்சப்பூர்** தொழுநோயாளர் காலனில் குறைந்தபட்சம் 15 பேருடைய பழுதடைந்த வீட்டுக் கூரைகளை மாற்றிக் கொடுக்கவும், மருத்துவஉதவிகள் செய்யவும், 2 பேருக்கு மூக்குக் கண்ணாடி வாங்கி கொடுக்கவும் மற்றும் ஊனமுற்ற சகோதரி ஸ்டாருக்கு மாவட்ட சமூக சேவை மையம் மூலம் மூன்று சக்கர வண்டி வாங்கி கொடுக்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

**12. ஏழைகள் / விதவைகள் ஊழியம் :** திருச்சி – **சூறாவளிப்பட்டி**யிலுள்ள ஏழைகளுக்கும், விதவைகளுக்கும் அவ்வப்போது உணவு பொட்டலங்கள் மற்றும் உதவிகள் செய்யப்பட்டன.

**13. பார்வையற்றோர் ஊழியம் :** திருச்சி – **காந்திநகர்** பகுதியிலுள்ள பார்வையற்றோருக்கு நவம்பர் மாதத்தில் குடும்பத்திற்கு 5 கிலோ அரிசி வீதம் 70 குடும்பத்தினருக்கு இலவசமாக வழங்கப்பட்டது. டிசம்பர் 1ம் தேதி திருச்சி – ஏர்போர்ட் பகுதியிலுள்ள பார்வையற்றோர் இல்லத்திலுள்ளவர்களுக்கு கிறிஸ்மஸ் உணவாக பிரியாணி மற்றும் சோப்பும் வழங்கப்பட்டது.

**ஊழியங்களுக்காக ஜெபித்த,கொடுத்த,உழைத்த யாவருக்கும் நன்றி**
**2012ஆம் ஆண்டிலும் உங்கள் ஜெபமும்,ஆதரவும் எங்களுக்கு தேவை!**

# கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலகம் 2011 நவம்பர் மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நவம்பர் மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றன. மழையின் நடுவிலும் ஊழியங்களை நிறைவேற்ற கர்த்தர் எங்களை பெலப்படுத்தினார். நமது அலுவலகத்தின் அருகிலுள்ள வாத்தியார்விளை பகுதியில் நூற்றுக்கணக்கான புறமதக் குடும்பங்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ள மிக வாஞ்சையாய் உள்ளனர். அப்பகுதியில் இம்மாதம் 2 முறை சென்று சுவிசேஷப் பணி செய்ய கர்த்தர் கிருபை செய்தார். திறந்தவாசலைக் கட்டளையிட்டார். பின்தொடர் பணிக்காக அநேகர் விலாசங்களைக் கொடுத்தனர். தொடர்ந்து சந்திக்கப்பட வேண்டிய அநேகர் இருப்பதால் அப்பகுதியில் சுவிசேஷ ஊழியம் தடையின்றி நடைபெற ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**தேவனுக்கே மகிமை !**

**TVGM அறிமுகப்பணி அலுவலகம்**
**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001

கிறிஸ்துவின் பணியில்,
**N.ஷோபனா இவாஞ்ஜலின்**
செல்: **98658 26424**
போன் : 04652 - 277251

**TVGM தலைமை அலுவலகம்**
போன் : 0431 - 2607241 செல் : 94449 80445 , 94435 44628
Email : 100village@tvgm.org Web : www.tvgm.org

## வண்ணப்படங்களுடன் நம் மத்தியில் வாழ்ந்த அவர் இயேசுகிறிஸ்து யார் ?

மேற்கண்ட தலைப்பிலுள்ள புத்தகத்தை தமிழ்நாட்டிலுள்ள 1 லட்சம் மாணவ , மாணவிகளுக்கு இலவசமாக வழங்க திட்டமிட்டு ஜெபித்து வருகிறோம். இதற்காக சில ஒழுங்கு முறைகளையும் நாங்கள் வைத்திருக்கிறோம்.

முதல் கட்டமாக **பாஸ்டர் ஜான் பிண்டோ** அவர்கள் தஞ்சாவூரிலுள்ள பள்ளிகளில் இந்த புத்தகங்களை இலவசமாக விநியோகிக்கும்படியாக ஒரு புத்தகத்திற்கு 25பைசா வீதம் ( சர்வீஸ் சார்ஜ் ) , மாணவர்களின் எண்ணிக்கை, தலைமை ஆசிரியரின் அனுமதி தபாலையும் கொண்டு வந்து, புத்தகத்தை ஏற்றி செல்வதற்கான வாகனத்தையும் அவர்களே ஒழுங்கு செய்து நேரடியாக திருச்சி – சோமரசம்பேட்டைக்கு வந்து 15000 புத்தகங்களை எடுத்து சென்றுள்ளார்கள்.

இதே போல செய்ய விரும்புகிறவர்களுக்கு இந்த புத்தகங்களை நாங்கள் இலவசமாக கொடுக்கவிருக்கிறோம். உங்கள் ஊரிலுள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் தலைமை ஆசிரியர் , முதல்வரின் அனுமதி பெற்று இலவசமாக விநியோகிக்க விரும்பினால் விரங்களுக்கு எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு முகவரி : பக்கம் 16

## தினமும் ஒரு நிமிடமாவது ஜெபிப்பீர்களா?

**“இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்”. 1தெச.** 5:17

# தினசரி ஜெபக்குறிப்புகள்

***திங்கள்:*** 2011ம் ஆண்டு முழுவதும் நம்மை கிருபையாக நடத்திய தேவனைத் துதியுங்கள். 2012ம் ஆண்டு நமக்கு ஜெயத்தின் ஆண்டாக அமைய கருத்தாய் ஜெபியுங்கள்.

***செவ்வாய்:*** வட இந்தியாவில் குறிப்பாக மகாராஷ்டிராவில் M.V.M. ஊழியத்தின் மூலம் புதிதாக ஆரம்பிக்க விரும்பும் 100–கிராம ஊழியத்திற்காகவும், **சகோ.குலோத்துங்கன்** அவர்கள் வாஞ்சையை தேவன் நிறைவேற்றும் படியாகவும் ஜெபியுங்கள்.

**புதன் :** 2011ல் சுவிசேஷக் கைபிரதிகள் வழுங்கப்பட்ட 3 மாநிலங் களில் ( தமிழ்நாடு, ஒரிஸா, மகாராஷ்டிரா ) அநேக பிள்ளைகள் விசுவாசத்தில் வளரவும் , தேவனுக்கு சாட்சியாக ஜீவிக்கவும் ஜெபியுங்கள்.

**வியாழன் :** தமிழ்நாட்டில் நடைபெறும் 100–கிராம ஊழியம் , பின்தொடர்பணி , இயேசுவை விரும்புவோர் முகாம் , சீஷத்துவப் பயிற்சி, முழுநேர அலுவலக ஊழியங்கள், ஜெபவீடு கட்டும் பணிகள், சிறுவர் இல்ல ஊழியங்கள், தொழுநோயாளர் , பார்வையற்றோர், விதவைகள் , தையற்பள்ளி ஆகிய ஒவ்வொரு பணிகள் மூலம் தேவனுடைய நாமம் மகிமைப்படும் படியாக ஜெபியுங்கள்.

***வெள்ளி:*** ஒரிஸா ஊழியங்கள் , இலங்கை ஊழியங்கள் மூலம் தொடர்ந்து கர்த்தருடைய நாமம் மகிமைப்படவும், பொருளாதார தேவைகள் சந்திக்கப்படவும் மற்றும் தேவையான உடன் ஊழியர்களை கர்த்தர் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.

***சனி :*** TVGM & TASOL அலுவலக பணியாளர், அறிமுகப்பணியாளர் மற்றும் டிரஸ்டிகள் அனைவருக்கும் கர்த்தர் தியாகத்தையும், அர்ப்பணிப் பையும் கிருபையாக கட்டளையிட ஜெபியுங்கள்.

***ஞாயிறு :*** சகோ. ஸ்டீபன் , சகோதரி பெர்சிஸ், மகன் ஜான் காலேப் ஆகியோருக்கு கர்த்தர் நல்ல சுக பெலனை கட்டளையிட ஜெபியுங்கள்.

TVGM க்கு தேவைப்படும் பின்வரும் காரியங்களுக்காக ஜெபியுங்கள்.

1. மேனேஜர்
2. கம்ப்யூட்டர் ஸ்டாப்கள்
3. டெம்போ டிராவல் டிரைவர் மற்றும் அத்துடன் கார் டிரைவர்
4. சமையல் பணியாளர்
5. வாட்ச்மேன்
6. தோட்டக்காரர்
7. வெட்சைட் டிசைனர்
8. பத்திரிகையை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பவர்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி. 9 : 7


காணிக்கை , பத்திரிகை சந்தா, தபால் அனுப்ப வேண்டிய
**TVGM தலைமை அலுவலக முகவரி**
BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.
**TAMIL VILLAGE GOSPEL MISSION (TVGM)**
"1OO-VILLAGE" SOMARASAMPETTAI
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.
Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445
Email : 100village@tvgm.org Web : www.tvgm.org
Founder : Bro . P.T. Christopher - Cell : 94435 44628


**டிராப்ட் , செக்,** Bank to Bank **அனுப்ப வேண்டிய முறை**

Canara Bank , Code No: 1249, Puthur Branch, Trichy - 620 017

| நோக்கம் | காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம் |
|---|---|
| **100 கிராம ஊழியம்,** யோவான் சுவிசேஷம், பின்தொடர்பணி, ஜெபவீடு கட்டுதல், முழுநேர ஊழியர் மற்றும் வட இந்திய ஊழியங்கள் – கைபிரதிகள், ஆலயம் கட்டுதல் | **Tamil Village Gospel Mission**<br>SB. A/c :**12491010 - 23822** Indian Origin<br>SB. A/c : **12491010 -11947** Foreign National |
| சிறுவர் இல்ல பிள்ளை–களின் பராமரிப்பு, சிறுவர் இல்ல கட்டிடம், **மருத்துவ நிதி, தையற்மிஷின், கிறிஸ்மஸ் அன்பளிப்புகள் தொழுநோயாளர், விதவைகள், பார்வையற்றோர் , ஏழை, எளியவர் உதவி** | **TVGM Social service** ( 80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c : **12491010 - 23805** Indian Origin<br>SB. A/c : **12491010 - 24967** Foreign National |
| **TASOL**<br>**நிலம் வாங்குதல்**<br>**உயர் கல்வி நிதி** | **The Ambassador School of Learning (TASOL)**<br>(80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c : **12491010 - 38110** Indian Origin only |

Cheque , D.D அனுப்பும்போது மேற்கண்ட ஸ்தாபனத்தின் பெயர், A/c No. Bank Code தெளிவாக குறிப்பிட்டு அனுப்புங்கள். சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர் என்ற தனிப்பட்ட பெயரில் தயவுசெய்து அனுப்ப வேண்டாம்.

**குறிப்பு :** காணிக்கை அனுப்பும்போது நோக்கம், தொகை, முழுமுகவரி, தொலைபேசி, ஈமெயில் யாவும் எங்களுக்கு தெரியப்படுத்தி உதவுங்கள்.


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at Trichy H.O. Stg.

2011 நவம்பர் 28 , 29 தேதிகளில் தேவனுடைய மகிமைக்கென்று
4 ஜெபவீடுகளை பிஷப் ஜோசப் ஜெபமணி குடும்பம் பிரதிஷ்டை செய்தார்கள்.


பிஷப் குடும்பம்


கோட்டூர் – 29.11.2011


குப்பம்மா சத்திரம் 28.11.2011


மத்துார் 28.11.2011


தோட்டநாவல் 29.11.2011

**நன்றி :** பிஷப் ஜோசப் ஜெபமணி & குடும்பம்
Yishun Evangelical Church - Singapore.

To

**Return Requested:** Tamil Village Gospel Mission
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.